**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074735

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : மாவட்டம் **Tiruvannamalai** PS: காவல்நிலையம் **V&AC** Year: ஆண்டு **2024** FIR No.: மு.த.அ. எண் **02/2024** Date: நாள் **20.02.2024**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் **16.02.2024** Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் **1030 Hrs** Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **20 .02.2024** Time : நேரம் **1600 Hrs**
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - I** Time : நேரம் **1730 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **55 Kms North East**
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி **Periyakozhipuliyur Village, Chetpet Taluk, Tiruvannamalai District.**
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.V.Sagadevan** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o.N.Varadhraj**
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-31** (d) Nationality : நாட்டினம் **Indian** (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் **Photographer** (g) Address : முகவரி **No.157/1, Cheyyanandhal Village, Thatchampadi post, Chetpet Taluk, Tiruvannamalai District**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tr.Dheenadhayalan, Surveyar, Thatchampadi Village, Chetpet Taluk, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) ------

10. Total value of properties stolen / involved : ------
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: ------
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) : ------
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துஅனுப்பப்படுகிறது.

திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 20.02.2024 ஆம் தேதி 16.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் V.சகாதேவன், வயது-31/2024, த/பெ.N.வரதராஜ், .157/1, செய்யானந்தல் கிராமம், தச்சாம்பாடி அஞ்சல், சேத்பட் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம்.என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் V.சகாதேவன், வயது-31/2024, த/பெ.N.வரதராஜ், நெ.157/1, செய்யானந்தல் கிராமம், தச்சாம்பாடி அஞ்சல், சேத்பட் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். செல்.9965507169. பெறுநர் உயர்திரு. காவல் துணைக் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, நான் திருவண்ணாமலை மாவட்டம், சேத்பட் வட்டம், செய்யானந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். எனக்கு திருமணமாகி இரண்டு வருடம் ஆகின்றது. எனது தந்தை வரதராஜ் மற்றும்

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................... பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

V.S [signature] 20/02/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.02.2024, 18.00 hrs.

Name: பெயர் S. VELMURUGAN
Rank: நிலை D.S.P. No. எண் V & A C TIRUVANNAMALAI

தாயார் செல்வி என்னுடன் வசித்து எங்களுக்கு பூர்வீகமான செய்யானந்தல் கிராமத்தில் உள்ள நிலத்தில் விவசாய வேலை செய்து வருகிறார்கள். எனக்கு உடன்பிறந்த தம்பி செய்யார் அரசு கலை கல்லூரியில் படித்துவருகிறார். நான் வீட்டில் இருந்துக்கொண்டே திருமணம் மற்றும் சுபவிஷேசங்களுக்கு வீடியோ மற்றும் போட்டோகிராபி தொழில் செய்து வருகிறேன். எங்கள் வீட்டின் எதிரே வசிக்கும் அண்ணன் உறவுமுறையான E.அரிகிருஷ்ணன் அவர்கள் திருமணமாகி குடும்பத்துடன் வசித்து வீடு கட்டும் கட்டுமான சென்ட்ரிங் வேலை செய்துவருகிறபடியால் அவருக்கு சரிவர அரசு அலுவலக ரீதியான வேலைகளை செய்வதற்கு பழக்கம் இல்லாத காரணத்தினால் அரிகிருஷ்ணன் அவர்களுக்கு நான் உடனிருந்து வேலைகளை செய்வது எனது வழக்கம் ஆகும். எனது அண்ணன் அரிகிருஷ்ணன் அவர்கள் கடந்த 22.12.2023 அன்று எங்கள் கிராமத்தைச் சேர்ந்த தனபால் மனைவி சௌபாக்கியம் என்பவரிடம் சேத்பட் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.4628/2023 கிரையமாக பத்திரத்தில் சொல்லப்பட்ட செய்யானந்தல் கிராம அயன் புன்செய் சர்வே எண்கள்.373/2 -ல் 0.17 சென்ட்டும், 373/4 -ல் 0.38 சென்ட்டும், 373/6 -ல் 0.15 சென்ட்டும், 371/1 -ல் 0.63 சென்ட்டும், 373/3-ல் 0.74 சென்ட்டும், மேற்படி கிணறு மற்றும் மோட்டார் சர்வீஷ்வுடன் கிரையம் பெற்றிருந்தார். மேற்படி நிலத்திற்கு பட்டா பெயர் மாற்றம் செய்து பட்டா எண்.988, 2058, 494 என வருவாய் துறையினரால் வழங்கப்பட்டது. இதில் பட்டா எண்.494 -ல் உள்ள சர்வே எண்கள். 371/1 -ல் 0.63 சென்ட் மற்றும் 373/3-ல் 0.74 சென்ட் ஆகிய சொத்துக்கள் தனிப்பட்டாவாக உட்பிரிவு செய்து வழங்கப்பட வேண்டும். ஆனால் மேற்படி அரிகிருஷ்ணன் நிலமானது கூட்டுப்பட்டாவாக வழங்கப்பட்டுள்ளது. மேலும் இதுசம்மந்தமான அரிகிருஷ்ணனுடைய உட்பிரிவுடன் கூடிய பட்டா மாறுதல் விண்ணப்ப மனு எண்.2023/0105/06/479475 நிராகரிக்கப்பட்டுள்ளது என்று குறுஞ்செய்தி கடந்த 10.02.2024 -ந்தேதி அவருடைய தொலைபேசி எண்.9965627282-க்கு வந்த காரணத்தினால் அவர் இதுசம்மந்தமாக தச்சாம்பாடி சர்வேயர் திரு. தீனதயாளன் அவர்களை சந்தித்து மேற்படி கூட்டுப்பட்டாவை உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாகவும், மேலும் அவருடைய பெயரில் உள்ள கிரைய பத்திரம் ஆவண எண்.1322/2009 மற்றும் ஆவண எண்.1440/2014 சொத்தின் கிரைய பத்திரங்களை எடுத்துக்கொண்டு நானும் அரிகிருஷ்ணனும் சர்வேயரை சந்தித்து உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக பெற தச்சாம்பாடி சர்வேயர் திரு.தீனதயாளன் அவர்களை கடந்த வெள்ளிக்கிழமை 16.02.2024 -ந்தேதி சேத்பட் தாலுக்கா அலுவலகத்தில் உள்ள அவருடைய அலுவலகத்திற்கு சென்று காலை சுமார் 09.30 மணிக்கு சர்வேயர்

திரு.தீனதயாளன் அவர்களை சந்திக்க சென்றபோது அவர் பெரியகொழிபுளியூர் கிராமத்திற்கு பீல்டிற்கு சென்றிருப்பதாக அங்கிருந்தவர்கள் கூறினார்கள். அதை தொடர்ந்து நானும் அரிகிருஷ்ணனும் பெரியகொழிபுளியூர் கிராமத்திற்கு சென்று ஏற்கனவே எங்களுக்கு அறிமுகமான சர்வேயர் தீனதயாளன் அவர்களை சந்தித்து மேற்படி நானும் அரிகிருஷ்ணனும் நிலத்தின் பட்டா எண்.494 -ஐ ஏன் கூட்டுப்பட்டாவாகவே வைத்துள்ளீர்கள் என்று நாங்கள் கேட்டதற்கு அவர் கிரையம் மட்டும் பெற்றுக்கொண்டால் போதுமா நீங்கள் என்னை ஏன் வந்து பார்க்கவில்லை என்று கேட்டார். அதற்கு அரிகிருஷ்ணன் நான் சென்ட்ரிங் வேலை செய்வதாலும். அரசு அலுவலக ரீதியான வேலைகள் எனக்கு பழக்கம் இல்லை என்பதாலும் என்னுடைய தம்பி உறவுமுறையான சகாதேவன் தான் எனக்கு உடனிருந்து வேலைகளை செய்வார் அதனால் தான் அவரை அழைத்து வந்துள்ளேன் என்று கூறினார். அதற்கு அவர்: கிரையம் பெற்ற பத்திர ஆவண எண்.1322/2009 மற்றும் ஆவண எண்.1440/2014 ஆவணங்களையும் உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக மாற்றம் செய்யுமாறு கூறினார். அதற்கு அவர் பட்டா எண்.494 மற்றும் இரண்டு கிரைய சொத்துக்களையும் தனிப்பட்டாவாக மாற்ற எனக்கு ஒரு பட்டா வீதம் ரூ.4,000/- என மூன்று பட்டாவிற்கு ரூ.12,000/- இலஞ்சமாக வேண்டும் என்று சொன்னார். அதற்கு நாங்கள் எங்களிடம் அவ்வளவு பணம் இல்லை என்றும் கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டதற்கு அவர் மூன்று பட்டாவையும் உட்பிரிவு செய்து தனிப்பட்டாவாக மாற்றம் செய்ய கராராக ரூ.10,000/-ம் இலஞ்சமாக வேண்டும் என்று சொல்லி எங்களிடம் இருந்த கிரைய பத்திரங்களை பெற்றுக்கொண்டு சரி முதலில் ரூ.5,000/-ம் கொடுங்கள் பின்பு பட்டா மாற்றம் செய்த பின் ரூ.5,000/- ம் கொடு என்று மீண்டும் கராராக சொன்னார். அதற்கு அரிகிருஷ்ணன் அவர்கள் சர்வேயரைப் பார்த்து எனக்கு கட்டிட சென்ட்ரிங் வேலை உள்ளது என்பதால் இதுசம்மந்தமாக எனது தம்பி சகாதேவன் உங்களை சந்திப்பார் என்று சொல்லி நாங்கள் புறப்பட்டு வந்துவிட்டோம். பின்னர் நானும் எனது அண்ணன் அரிகிருஷ்ணனும் கலந்தாலோசித்து பட்டா பெயர் மாற்றம் செய்ய இலஞ்சமாக எங்களிடம் ரூ.5,000/-ம் கேட்ட சர்வேயர் திரு.தீனதயாளன் அவர்களுக்கு இலஞ்சம் தர எங்களுக்கு விருப்பம் இல்லை என்பதால் எங்களிடம் இலஞ்சம் கேட்ட தச்சாம்பாடி சர்வேயர் திரு. தீனதயாளன் மீது சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும்படி எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினியில் தட்டச்சு செய்து தங்களிடம் புகார் மனு அளிக்கிறேன். எனவே என்னிடம் இலஞ்சம் கேட்ட அதிகாரி மீது

நடவடிக்கை எடுக்குமாறுபணிந்து கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, (SdXXXXX) V.Sagadevan 20.02.2024

Sir,

Received the complaint on 20.02.2024 at 16.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 20.02.2024 at 17.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.02/2024, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. (Sd/-XXXXX) 20.02.2024. S.Velmurugan, Deputy Superintendent of Police, V&AC, Tiruvannamalai. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned.

20.02.2024

(S. VELMURUGAN
Deputy Superintendent of Police
Tiruvannamalai)